### தமிழ்நாடு முழுவதும் உணவகங்களில்

# உணவு தயாரிப்பை கண்காணித்து ஆய்வு செய்க!

## உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உத்தரவு!

சென்னை, செப்.21- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழ்நாடு முழுவதும் உள்ள உணவகங்களில், உணவு தயாரிப்பதில் உரிய வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றப்படுகிறதா என கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் உணவு பாதுகாப்புத்துறை மாவட்ட நியமன அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் 16.09.2023 அன்று இரவு, ஐவின் (Iwins Restaurant) உணவகத்தில் உணவு உண்டதை தொடர்ந்து 42 நபர்கள் வயிற்றுபோக்கு மற்றும் வாந்தி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக 17.09.2023 அன்று காலை அறிக்கை பெறப்பட்டது. மேலும், கலையரசி என்னும் 14 வயது மாணவி மேற்கண்ட உணவகத்தில் உணவு உண்டதை தொடர்ந்து வயிற்று போக்கு மற்றும் வாந்தி ஏற்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார், சிகிச்சை பலனளிக்காமல் 18.09.2023 அன்று இறந்ததாக அறிக்கை பெறப்பட்டது.

நாமக்கல் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலர், உணவகத்தில் ஆய்வு மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

17.09.2023 அன்று உணவு பாதுகாப்புக் குழு உடனடியாக ஆய்வு செய்ததில், மேற்கண்ட உணவகத்தில் 16.09.2023 அன்று மட்டும் இரவு சுமார் 200 நபர்கள் உணவு அருந்தியதாக தெரிய வருகிறது. உடனடியாக பொது சுகாதார துறையினருடன் இணைந்து நோய் கண்காணிப்பு தீவிரப்படுத்தி அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மொத்தமாக 42 நபர்கள் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தற்பொழுது அனைவரும் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர். மேலும், உணவகம் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டு சந்தேகப்படும் வகையில் வைக்கப்பட்டிருந்த உணவிலிருந்து 3 உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டு சேலம் உணவு பகுப்பாய்வகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதன் அறிக்கை இந்த வார இறுதியில் தெரியவரும், மேலும், சந்தேகத்திற்குரிய 42 கிலோ இறைச்சி கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன் மேற்கண்ட உணவகத்தின் உணவு பாதுகாப்பு உரிமம் ரத்து செய்யப்பட்டு, உணவகம் உடனடியாக சீல் வைக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவின்படி, ஷவர்மா மற்றும் சந்தேகத்திற்குரிய கிரில் சிக்கன் போன்ற உணவு பொருட்களை விற்பனை செய்ய நாமக்கல் மாவட்டம் முழுவதும் தடை விதிக்கப்பட்டுள்ளது. சேலம் மற்றும் நாமக்கல் மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சிறப்பு பணிக்காக அனுப்பப்பட்டு நாமக்கல் மாவட்டம் முழுவதும் உணவகங்களை ஆய்வு செய்யும் பணியில் அமர்தப்பட்டு உள்ளார்கள். பொது சுகாதார துறையுடன் இணைந்து நிகழ்வுகளை கண்காணிக்கவும் (Surveillance), பாதிக்கப்பட்டவர்களை தொடர்ந்து கண்காணிக்கவும் 13 சுகாதார ஆய்வாளர்கள் உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டுதீவிரகண்காணிப்புப் பணி நடைபெறுகிறது.

அனைத்து உணவகங்களும் தர கட்டுப்பாட்டில் உள்ளதா என கண்காணித்தல், பொதுமக்கள் மற்றும் உணவு வணிகர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி அளித்தல், தரக் கட்டுப்பாட்டை உறுதி செய்தல், சந்தேகத்தின் அடிப்படையில் உணவு மாதிரி பரிசோதனை செய்வது, பரிசோதனையின் அடிப்படையில் உணவு தரம் இல்லா சூழலில் அபராதம் விதிப்பது, தேவைக்கேற்ப உரிமத்தினை ரத்து செய்து கடைக்கு சீல் வைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏற்கனவே உணவு பாதுகாப்பு துறையின் மூலமாக கடந்த ஏப்ரல் 2023 முதல் ஆகஸ்ட் 2023 வரை தமிழ்நாடு முழுவதும 38,191 ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளது அதில் 1,478 ஆய்வுகள் நாமக்கல் மாவட்டத்தில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு முழுவதும் 7,825 சட்ட ரீதியான உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளது, அதில் 214 நாமக்கல் மாவட்டத்தில் மட்டுமே எடுக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு முழுவதும் 27,151 கண்காணிப்பு உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளது, அதில் நாமக்கல் மாவட்டத்தில் மட்டுமே 688 மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு முழுவதும் 1,894 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ரூ.1.55 கோடி அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. இதில் நாமக்கல் மாவட்டத்தில் மட்டுமே 66 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ரூ.5.79 இலட்சம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், என்னுடைய அறிவுறுத்தலின் பேரில், கடந்த 28.08.2023 முதல் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் ஷவர்மா உள்ளிட்ட எளிதில் கெட்டு போகக்கூடிய உணவுகளை ஆய்வு செய்ய நியமன அலுவலர்கள் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக 28.08.2023-க்கு பிறகு நடைபெற்ற ஆய்வில் சுமார் 280 கிலோ கெட்டுப்போன உணவு பொருட்கள் பறிமுதல் செய்து அழிக்கப்பட்டுள்ளது. அதற்காக விதிக்கப்பட்ட அபராத் தொகை ரூ.1.77 இலட்சம் ஆகும். இப்படி பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டும் நாமக்கல் மாவட்டத்தில் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது மனவருத்தத்திற்குரியது.

எனவே, உணவு பாதுகாப்புத்துறை அலுவலர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து உணவகங்களிலும், உணவு தரமாக உள்ளதா என்பதை அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க கேட்டுக் கொள்கிறேன். மேலும், நாமக்கல் மாவட்ட நியமன அலுவலர் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர் ஆகியோரிடம் நடந்த சம்பவத்திற்கான துறைரீதியான விளக்கம் கேட்க உத்தரவிடப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர் ஊராட்சிக்குட்பட்ட கட்டனாச்சம்பட்டி, மூலக்காடு, ஆலாம்பட்டி, பழந்தின்னிப்பட்டி, மாட்டுவேலம்பட்டி, அக்கரைப்பட்டி, மதியம்பட்டி மற்றும் தொட்டிப்பட்டி ஆகிய 8 ஊராட்சிகளில் ரூ. 2.04 கோடி மதிப்பீட்டில் 22 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழக வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் ஆர்.எம்.துரைசாமி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### இரண்டு முறை ஏமாந்து வாக்களித்த மக்கள் வரும் தேர்தலில் ஏமாறமாட்டார்கள்!

# 2024 தேர்தலில் பி.ஜே.பி.க்குப் பாடம் கற்பிப்பீர்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப். 21 - மூன்று முறை தடை செய்யப்பட்டது ஆர்.எஸ்.எஸ். உருமாற்றங்களை அடிக்கடி மேற்கொள்ளும் தந்திரம் கொண்டது. இரு முறை ஆட்சிப் பொறுப்புக்கு வந்த ஒன்றிய பி.ஜே.பி. அரசு, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், புதிய புதிய தந்திரங்களை போலி வாக்குறுதிகளைக் கொடுக்கிறது வரும் மக்களவைத் தேர்தலில் பொதுமக்கள் ஏமாறாமல் பி.ஜே.பி. ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவீர் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ஆர்.எஸ்.எஸ். ஆட்சி ஒன்றியத்தில் 'பி.ஜே.பி.' என்ற அரசியல் பெயருடன்; 1980 ஆம் ஆண்டுதான் அது தொடங்கப் பெற்றது. அதற்கு முன்பிருந்த 'பாரதீய ஜனசங்' என்பதின் மாற்றமே இது!

தற்போது 36 அமைப்புகளை தன்னகத்தே கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அதன் நூற்றாண்டை வரும் 2025 இல் கொண்டாடவிருக்கிறது.

தந்தை பெரியார் அவர்கள் தொடங்கிய சுயமரியாதை இயக்கமும், கம்யூனிஸ்ட் கட்சியும் அவ்வாண்டில் தொடங்கப்பட்டவையே!

1925 முதல் பல உருமாற்றங்கள் முதலில் பார்ப்பனர் பனியா இவர்களின் நலனைப் பாதுகாக்கவே 'ஹிந்து சங்காத்தனில்' தொடங்கி, பிறகு 'ஹிந்து மஹாசபை' என்று மத அடிப்படையில் அமைப்புகளை முகவிலாசமாக மாற்றி, அதுவும் அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு இளைஞர்களிடையே வளராததால், தொண்டுக்கான நிறுவனம் என்ற பெயரில், தொண்டு முகமூடி போட்டுக்கொண்டு 1925 இல் உருவாக்கப்பட்டதுதான் 'ராஷ்டிரிய சுய சேவக் சங்கம்' என்ற அமைப்பு!

இதனுடைய பணிகள் எதுவும் வெளிப்படையான கொள்கை ரீதியானவை என்பதில்லாமல், முகமூடி அணிந்து அவ்வப்போது தங்களது நிலைப்பாட்டை மாற்றி, முதலில் தொண்டு, பிறகு கலாச்சார அமைப்பு என்று கூறி பிறகு, பல்வேறு அரசியல் உருமாற்றங்கள் முதலியன.

**வன்முறைக்காக மூன்றுமுறை தடை செய்யப்பட்டது ஆர்.எஸ்.எஸ்.**

இந்நாட்டில், அதன் வன்முறைகளுக்காக, ரகசிய செயல்பாடுகளுக்காக மூன்றுமுறை தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பு உள்ளது என்றால், அந்தப் "பெருமை" ஆர்.எஸ்.எஸ் அமைப்பையே சாரும்! இதன் தலைவர் பொறுப்பில் ஒரே ஒருவரைத் தவிர (ராஜேந்திரசிங்), அதுவும் சிலகாலம்தான் மராத்தி சித்பவன் பார்ப்பனர்கள் உயர் ஜாதி அமைப்பு 'ஹிந்துத்துவா' என்ற அரசியல் கோட்பாடுகளுக்கும் அவர்களே தோற்றுநர்கள்.

1. ஹெட்கேவார்
2. கோல்வால்கர்
3. பாலா சாகேப் தேவரஸ்
4. ராஜேந்திரசிங் (குறுகிய காலம்)
5. மோகன் பாகவத்

இதில் கோல்வால்கர் காலத்திலும், தேவரஸ் காலத்திலும் மும்முறை தடை செய்யப்பட்டது ஆர்.எஸ்.எஸ். இயக்கம்!

காந்தியாரை கோட்சே சுட்டுக் கொலை செய்த போதும் (1948),

நெருக்கடி நிலை பிரகடனப்படுத்திய காலகட்டத்திலும் (1976),

பிறகு பாபர் மசூதி இடிக்கப்பட்ட காலத்திலும் (1992) தடை செய்யப்பட்டது.

இருமுறை ஆட்சியிலும் பொய்யான வாக்குறுதிகள்!

பா.ஜ.க. அரசியலில் கொஞ்சம் காலம் தனியே நின்று படுதோல்வி அடைந்து, பிறகு கூட்டணி தயவில் 23 நாள் ஆட்சி முதல் இன்றுவரை பல அவதாரங்கள், 'உத்திகளை, வித்தை'களைக் காட்டி வந்தது ஆர்.எஸ்.எஸ். அதன்மீதான தடையின்காரணமாக (1914 முதல்) சிறையில் இருந்தபோது, அதன் தலைவர் அன்றைய பிரதமர் நேரு, உள்துறை அமைச்சர் பட்டேல் போன்றவர்களிடம் அடங்கி ஒடுங்கி, தங்களது செயலில் மாற்றம் உருவாக்கும் உறுதிமொழிக் கடிதங்கள் எழுதுவது பிறகு வழமைபோல ரகசிய முறையில் வன்முறைகளைக் கையாண்டு, பல வித யுக்தி

களை மேற்கொள்வது அதன் வழமையான குணாம்சம்! கடந்த இரண்டு முறையும் 'வளர்ச்சி' போன்ற பொய்யை, 'வளப்படுத்துதல்' போன்ற பொய்யுரைகளைக் கூறி, இளைஞர்களுக்கு வாக்குறுதித் தேனை வாயில் தடவி, எப்படியோ ஆட்சியைப் பிடித்து, தங்களது திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு, "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்று அரசியல் களத்தில் ஆட்டம் நடத்துகின்றனர் பா.ஜ.க.வினர்!

இனியும் மக்கள் ஏமாறமாட்டார்கள்!

கடந்த முறை இவர்களைப் புரிந்துகொள்ளாத வாக்காளர்கள், இம்முறை சாமான்ய மக்கள் படும் துயரம்மூலமாக "படமுடியாதினி துயரம் பட்டதெல்லாம் போதும்" என்று முடிவுக்கு வந்து தேர்தல் நாளை ஆவலுடன் எதிர் நோக்குகின்றனர்!

அதை நன்கு புரிந்து கொண்டனர் தங்களது பழைய வித்தைகள், சொத்தைகள் ஆகிவிட்டன! பிரதமர் மோடி, அமித்ஷா என்ற முகங்கள் வாக்குகளை வாங்கித் தராது என்பதை தெற்கே கருநாடக மாநிலத்திலும், வடக்கே இமாச்சலப் பிரதேசம் மற்றும் அண்மையில் நடைபெற்ற இடைத் தேர்தல்களிலும் புரிந்து கொண்டனர்!

இராமர் கோவில் கட்டினால் விலைவாசி குறையுமா? மக்கள் கேள்வி!

இராமர் கோவிலை இவர்கள் கட்டினால், உழைக்கும் மக்கள் "எங்களுக்கு 'ரொட்டி எங்கே?' வேலை எங்கே? விலைவாசி விண்ணை முட்டுகிறதே மணிப்பூரில் பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதும், மனித உயிர்கள் பலியும், பசுப் பாதுகாவலர்களின் அட்டகாசமும்தானே மிச்சம்?" என்று உணர்ந்து வரும் நிலை வந்துவிட்டதால், தங்களது ஒப்பனையை மாற்றி, திடீரென்று ஒடுக்கப்பட்டோர் சமூகநீதிபற்றி ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் தங்களது பழைய எதிர்ப்பை மக்கள் மறந்திருப்பார்கள் என்ற நினைப்பில், கசிந்துருகி கண்ணீர் பெருக 'அய்யோ, 2000 ஆண்டுகளாக இப்படி மக்கள் கல்வி, வேலை வாய்ப்பற்று இருக்கிறார்களே' என்று ஒப்பனை கலையும்போது ஒப்பாரிப் பாட்டை ஒப்புக்காகப் பாடுகிறார்கள்!

மகளிர் வாக்கைப் பெற இட ஒதுக்கீடு மசோதாவா?

மகளிர் வாக்கும் அவர்கள் எதிர்பார்த்தபடி வராது போலிருக்கிறதே என்று நினைத்த அவர்கள், மூலையில் போடப்பட்டிருந்த மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை திடீரென்று நிறைவேற்றி, அதையும் நிபந்தனைக்குட்படுத்தி மகளிர் வாக்குகளைப் பெற, சமூக நீதியோடு இதனையும் சேர்க்க முயலுகின்றனர்! அதிலும் ஏமாற்றமே அவர்களுக்கு மிஞ்சும்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைப்பு ஒற்றுமை இவர்களது வயிற்றில் புளியைக் கரைக்கிறது!

**வாக்காளர்களே, எச்சரிக்கை!**

இதற்கு மூலகாரணம் தமிழ்நாடு அல்லவா? தி.மு.க. தலைவர் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அல்லவா! எனவே, அவர்களை வேறு 'திரிசூலம்'மூலம் அச்சுறுத்தி, அபாண்டம் கூறி, அவதூறு அம்புகளை ஏவிவிட்டு, தேர்தல் வெற்றியைக் குறுக்கு வழியில் பறிக்கலாமா? என்று திகைத்துக் குழம்பிப் போய் உள்ளனர்!

'மயக்க பிஸ்கெட்டு'களை மக்கள் ஏற்கமாட்டார்கள்.

எனவே, மேலும் சில புதிய வித்தைகளைக் காட்டுவார்கள் அந்த அரசியல் வித்தைக்காரர்கள்!

வாக்காளர்களே, எச்சரிக்கையாக எதையும் ஆராய்ந்து செயல்படுங்கள்!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தமதுஅறிக்கையில் கூறியுள்ளார்.

### மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால்

# அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு சங்கங்களுக்கு மட்டுமே சான்றிதழ் சலுகை!

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அறிவிப்பு!

சென்னை, செப்.21- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட ஆவணங்களை முழுமையாக சமர்ப்பிக்கும் மாநில விளையாட்டு சங்கங்களுக்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கப்பட்டுவருகிறது. அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு சங்கங்களுக்கு தமிழ்நாட்டில், மாநில/தேசிய போட்டிகள் நடத்திடவும், தேசியப் போட்டிகளில் தமிழ்நாடு அணிகள் பங்கேற்பதற்கான மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ் பொறியியல், மருத்துவம் மற்றும் பிற தொழில் முறை படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டு வீரர்களுக்கு , அங்கீகரிக்கப்பட்ட மாநில சங்கங்கள் வழங்கும் விளையாட்டு போட்டிக்கான சான்றிதழ்கள் அடிப்படையில் மதிப் பெண்கள் வழங்கப்பட்டுவருகிறது.

பல்வேறு விளையாட்டு சங்கங்கள் மற்றும் இதன் தொடர்புடைய தேசிய கூட்டமைப்புகள் போட்டி நடத்திடும் அமைப்புகளாக மட்டுமே செயல்படுகின்றன. மேலும் இதுபோன்ற விளையாட்டு கூட்டமைப்புகள் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் அங்கீகாரம் பெறாமல் செயல்படுகின்றன. இப்போலிச் சங்கங்கள் விளையாட்டு போட்டிக்கான சான்றிதழ்களை வழங்கி வீரர்களை தவறாக வழி நடத்துகின்றன.

இதனால் பொறியியல் மற்றும் பிற தொழில்முறை படிப்புகளில் சேர்க்கை, மற்றும் 3% விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் வேலை வாய்ப்பு ஆகியவற்றில் போலியான மற்றும் அங்கீகாரம் பெறாத விளையாட்டு சங்கங்கள் வழங்கும் சான்றிதழ்களுக்கு மதிப்பெண்கள் வழங்குவதற்காக கோரிக்கைகள் பெறப்படுகின்றன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பல் வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதுடன், விளையாட்டு வீரர்கள் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாக நேரிடுகிறது.

போலியான மற்றும் அங்கீகாரம் பெறாத விளையாட்டு சங்கங்கள் சார்பில் வழங்கப்பட்ட முறையற்ற சான்றிதழ்களுக்கு மதிப் பெண் கிடைக்காமல் பலர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்கின்றனர். மேலும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அவப்பெயருக்கு உள்ளாக நேரிடுகிறது.

செல்வி.நித்தியா அவர்கள், சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுத்தவழக்கு எண்.3447/2019ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 19.01.2022 அன்று வழங்கிய உத்தரவில், மாநில விளையாட்டு சங்கங்களை முறை படுத்திட பல்வேறு வழிகாட்டு தல்களை வழங்கியுள்ளது. குறிப்பாக ஒவ்வொரு விளையாட்டுச் சங்கங்களும் /அமைப்பும் மாநிலஅரசிடம் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

மேலும், சென்னை உயர் நீதிமன்றம் மாநில விளையாட்டு சங்கங்களை முறைப்படுத்திட வழங்கிய பல்வேறு வழிகாட்டுதல்களை கொண்டு தமிழ்நாடு விளையாட்டுச் சட்டத்தினை (Sports Act) நடைமுறைப்படுத்திட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இனிவரும் காலங்களில், விளையாட்டு வீரர்களது எதிர்காலத்தினைக் கருத்தில் கொண்டும், சென்னை உயர்நீதி மன்றம் 19.01.2022 அன்று வழங்கிய உத்தரவின்படி, அனைத்து விளையாட்டு சங்கங்களும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அங்கீகாரம் பெற்று இருக்க வேண்டும்.

அங்கீகாரம் பெற்ற மாநில விளையாட்டு சங்கங்கள் மற்றும் தொடர்புடைய அகில இந்திய சம்மேளனம் வழங்கிடும் சான்றிதழ்கள் மட்டுமே பொறியியல், பிற தொழில் முறை படிப்புகளில், 3% விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் வேலை வாய்ப்பு மற்றும் உயரிய ஊக்க தொகை வழங்கிட பரிசீலிக்கப்படும்.

அனைத்து விளையாட்டு வீரர்/வீராங்கனைகள் தாங்கள் பங்கேற்கும் போட்டிகள் அங்கீகாரம் பெற்ற விளையாட்டு சங்கங்கள் மூலம் நடத்தப்படுகின்றதா என்பதை அறிந்து போட்டிகளில் பங்கேற்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அங்கீகாரம் பெறாமல், இவ்வாணையத்தின் பெயர் மற்றும் முத்திரையை பயன்படுத்துவது மற்றும் விதி முறைகளுக்கு புறம்பாக இவ்வாணையத்தின் பெயரை குறிப்பிட்டு சான்றிதழ்கள் மற்றும் படிவம் (I and II) வழங்கும் மாநில விளையாட்டு சங்கங்களின் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் அறிவித்துள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஆர்.கே. நகர் கிழக்கு பகுதி 40 வது வட்ட கிளைக் கழக சார்பாக வட்டச் செயலாளர் நா.கோதண்டன் ஏற்பாட்டில் மத்திய உணவு வழங்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், என்.அனிபா, ஆர்.டி. ராஜா, கே.பாலு, கே.பி. சதீஷ்குமார், மா.நாகராஜ், எஸ். தமிழ்ச்செல்வன், இர.பொன்இளவரசன், வெ.சு. சத்யநாராயணன், எஸ்.கே.இளங்கோ, சி.மணிகண்டன், என்.பிரமதாசன், எம். எம்.சாமி, பி.அன்பு, எம்.எஸ். ரவி, மு.சா.அரித்குமார், க.ஷேமந்த்குமார், தி.விஜயகுமார், ஆர்.வெங்கட், ஆர்.பத்மநாபன், ஏழுமலை, பாலு, லெனின், எஸ்.துரை, டி.எல்.பி.என்.ரவி, செல்ராஜா, ஏ.டில்லி ராஜன், தமிழ்சிவா, மற்றும் கழகத் தோழர்கள் பாக முகவர்கள் இளைஞரணி மகளிர் அணியினர் சார்பு மன்ற நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கடலூர் கிழக்கு மாவட்ட

# கழக மகளிர் அணி, தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

கடலூர், செப். 21- கடலூர் கிழக்கு மாவட்ட கழக மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், சிதம்பரம், அறுபத்து மூவர் திருமண மண்டபத்தில், மாலை 4.30 மணியளவில், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் அமுதராணி தலைமையில் நடைப்பெற்றது. மாவட்ட துணை செயலாளர் சுதா சம்பத் வரவேற்புரையாற்றினார். கடலூர் மேயர் சுந்தரி ராஜா, பொதுக் குழு உறுப்பினர் மஞ்சுஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினர்.

கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, ஒன்றிய கழகச் செயலாளர்கள் அ.முத்துசாமி முத்து. பெருமாள், கே.ஆர்.ராயர், வி.ஜி.பி.சபாநாயகம், ஆர். கலையரசன், டாக்டர் எம். மனோகரன், எம்.சோழன், சின்னசாமி, சங்கர், ராஜேந்திரன், மணிவண்ணன், பொதுக் குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், ஜேம்ஸ் விஜயராகவன், பேரூர் கழக செயலாளர்கள் கணேசமூர்த்தி கிள்ளை ரவி, பழனி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அப்பு சந்திரசேகர், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஜாஃபர் அலி, குறிஞ்சிப்பாடி பேரூராட்சி தலைவர் கோகிலா குமார்,

மகளிர் அணி தலைவர் லதா, வெ.மலர்விழி, செ.சங்கீதா, இரா.கௌரி, ஆ.ஜீவா, சோ.லதா, பெ.குமாரி, பு.ஜெயசுதா, மனோரஞ்சிதம், துணை அமைப்பாளர்கள் அ.தரணி, கா.காயத்ரி, த.ராஜகுமாரி, பா. விஜயலட்சுமி, ரா.சாந்தி ராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை, சேப்பாக்கம், ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (19.9.2023) நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டு இத்துறையில் பணிபுரிந்து பணியிடையே இயற்கை எய்திய ஊழியர்களின் வாரிசுதாரர்கள் 11 பேருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்குவதற்கான நியமன ஆணையினை வழங்கினார். அப்போது ஆதிதிராவிடர் நலத்துறையின் இயக்குனர் த.ஆனந்த் உடன் இருந்தார்.